**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் கந்தர்வகோட்டை.**
**மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு**
**ROC.No.814/2020/RG/F1, P.Dis. No.36/2021 Dated 07.04.2021**
**சுருக்குமுறை வழக்கு எண். 259/2024**
**வழக்கின் சுருக்கம்**

| | | |
|---|---|---|
| 1. | எதிரிகள் நீதிமன்ற காவலில் இருந்த காலம் | :எதிரிகள் கடந்த05.04.2024ம் தேதியன்று இந்நீதிமன்றத்தில் கு.ப.ம.எண். 849/2024ல், நாள்.05.04.2024ம் தேதியன்று சரணடைந்து சென்றுள்ளனர். |
| 2. | இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள் | :20.09.2023 |
| 3. | குற்றம் குறித்து கேள்வி கேட்கப்பட்ட நாள் | :23.06.2025 |
| 4. | தாக்கல் செய்யப்பட்ட குற்ற பல்வகை மனுக்களின் விவரம் | :3, 4 எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 262ன் படி CMP.No.1109/2024ல் தாக்கல் செய்யப்பட்ட மனு 285.10.2024ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. |
| 5. | அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்ட நாள் | :**முதல் விசாரணை** / **குறுக்கு விசாரணை**<br>அ.சா.1– 04.03.2026 / 04.03.2026<br>அ.சா.2– 04.03.2026 / 04.03.2026<br>அ.சா.3– 04.03.2026 / 04.03.2026<br>அ.சா.4– 17.03.2026 / 17.03.2026<br>அ.சா.5– 29.04.2026 / 29.04.2026<br>அ.சா.6– 26.05.2026 / 26.05.2026 |
| 6. | BNSS பிரிவு 351(1) (ஆ)இன் கீழ் எதிரிகளிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | :02.06.2026 |
| 7. | எதிரிகள் தரப்பு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்ட நாள்: | இல்லை |
| 8. | தலைமறைவு எதிரிகள் பற்றிய விவரம் | :இல்லை |

| | | | |
|---|---|---|---|
| 9. | மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் பிறப்பிக்கபட்ட இடைக்கால தடை உத்தரவு பற்றிய விவரங்கள் | : | இல்லை |

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.06.30 17:40:02 + 0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கந்தர்வகோட்டை**

**முன்னிலை: திரு. நா.சிவபழனி, B.A., B.L.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், கந்தர்வகோட்டை.

**2026ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 30ஆம் நாள் செவ்வாய்க் கிழமை**

திருவள்ளுவராண்டு 2057 ஸ்ரீபராபவ வருடம் ஆனி திங்கள் 16ம் நாள்

**சுருக்குமுறை வழக்கு எண். 259/2024**

**(CNR. No. TNPD11001319-2024)**

| | | |
|---|---|---|
| 1 | வழக்கு எண் | எஸ்.டி.சி. எண். 259/2024 |
| 2 | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் | ஆதனக்கோட்டை காவல் நிலையம்<br>குற்ற எண்.121/2023 |
| 3 | குற்றமுறையிடுபவர் | காவல் உதவி ஆய்வாளர்<br>ஆதனக்கோட்டை காவல் நிலையம் |
| 4 | எதிரிகளின் விபரம்<br>பெயர்<br>வயது<br>தந்தையின் பெயர்<br>குடியிருப்பு | 1. போதுமணி, வயது 45/2024,<br>க/பெ. கணேசன்<br><br>2. விருதாம்பாள், வயது 36/2024,<br>க/பெ. கோவிந்தராஜ்,<br><br>3. கணேசன், வயது<br>த/பெ. மருதமுத்து<br><br>4.கோவிந்தராஜ், வயது 45/2024<br>த/பெ. நடராஜன்,<br>**எதிரிகள் வசிப்பது**<br>தெற்கு தெரு, குப்பையன்பட்டி,<br>ஆதனக்கோட்டை அஞ்சல்,<br>புதுக்கோட்டை மாவட்டம். |
| 5 | சம்பவ நாள் | 20.09.2023 |
| 6 | முறையீடு | 21.09.2023 |
| 7 | கைது | எதிரிகள் நீதிமன்றத்தில் சரணடைந்துள்ளனர். |
| 8 | பிணையில் விடுவித்தல் | எதிரிகள் கடந்த05.04.2024ம் தேதியன்று இந்நீதிமன்றத்தில் கு.ப.ம.எண். 849/2024ல், நாள்.05.04.2024ம் தேதியன்று சரணடைந்து சென்றுள்ளனர். |
| 9 | விசாரணை துவக்கம் | 04.03.2026 |



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.06.30 17:40:02 + 0530

| | | |
|---|---|---|
| 10 | விசாரணை முடிவு | 26.05.2026 |
| 11 | தண்டனை அல்லது உத்தரவு | முடிவாக, 2வது எதிரி இதச பிரிவு 323இன் கீழ் குற்றவாளி என முடிவு செய்து, அதற்கு ரூ.1,000/− அபராதம் விதித்தும் அபராதம் கட்ட தவறினால் 1 வாரம் மெய்காவல் சிறை தண்டனை விதித்தும், 3, 4 எதிரிகள் இதச பிரிவு 323 உ/இ 109 இன் கீழ் குற்றவாளி என முடிவு செய்து, அதற்கு தலா ரூ.1,000/− அபராதம் விதித்தும், அபராதம் கட்ட தவறினால் தலா 1 வாரம் மெய்காவல் சிறை தண்டனை விதித்தும், குவிமுச பிரிவு 255(2)இன் கீழ் உத்தரவிடப்படுகிறது. (மொத்த அபராத தொகை ரூ.3,000/−). 1வது எதிரி சட்டப்பிரிவு 294(b), 323 இதசவின் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து , 1வது எதிரியை குவிமுச பிரிவு 255(1)−ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. |
| 12 | தீர்ப்புரை நகலை வழங்குவது அல்லது குற்றம் சாட்டப்பட்டவர் மீதான காண் முடிவு | எதிரிகளுக்கு தீர்ப்புரையின் நகல் வழங்கப்பட்டது |
| 13 | கால தாமததிற்கான விளக்கம் | காலதாமதம் இல்லை |

இவ்வழக்கானது 04.11.2024ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு இன்று 30.06.2026ம் தேதி என் முன் இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசுக்காக அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை−1 அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகளுக்காக கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.M.ஜெயந்தன், B.Sc., B.L.** அவர்களும் முன்னிலையாகியும் இருதரப்பு வாதங்களைக் கேட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.06.30 17:40:02 + 0530

**தீர்ப்புரை**

**2. அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்:–**

பட்டியல் சாட்சி–1 மாரிமுத்து என்பவருக்கும் எதிரிகள் குடும்பத்திற்கும் இடையே நீண்ட நாட்களாக இடப்பிரச்சனை இருந்து வந்த நிலையில், கடந்த 20.09.23ம் தேதி மதியம் சுமார் 01.00 மணியளவில், வயலுக்கு செல்ல பட்டியல் சாட்சி–1 மற்றும் அவரது அப்பாவான பட்டியல் சாட்சி–2 மாமுண்டி என்பவரும், 1வது எதிரி வீட்டின் வழியே சென்றபோது, சொத்துப் பிரச்சனையை மனதில் வைத்துக்கொண்டு எதிரிகள் அனைவரும் சேர்ந்து பட்டியல் சாட்சிகள் –1 மற்றும் 2 ஆகியோரை பார்த்து தேவுடியா பயலுகலா என்று அசிங்கமாக பேசியும், 3வது மற்றும் 4வது எதிரிகள் இருவரும், 2வது எதிரியை நீ போய் அடி நாங்கள் பார்த்து கொள்கிறோம் என்று சொன்னவுடன் 2வது எதிரி அருகில் கிடந்த RS– பதி கம்பை எடுத்து பட்டியல் சாட்சி 1ன் தலையில் ஓங்கி அடித்தும், பட்டியல் சாட்சி– 2 சண்டையை விலக்கி விட்டபோது, 1வது எதிரி ஓடிவந்து பட்டியல் சாட்சி–1 இன் இடுப்பில் ஓங்கி கம்பால் அடித்து தலையில் இரத்த காயமும், இடுப்பில் உள்காயத்தையும் உண்டாக்கி சாதாரண காயம் ஏற்படுத்தி குற்றம் புரிந்துள்ளனர். எனவே, எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 294(b), 323 இதசவின் கீழ் ஆதனக்கோட்டை காவல் உதவி ஆய்வாளர் குற்றயிறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பி எதிரிகள் நீதிமன்றத்தில் முன்னிலையானபோது, எதிரிகளுக்கு BNSS பிரிவு 230ன் படி வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டது. எதிரிகளுக்கு போதிய வாய்ப்பும், சந்தர்ப்பமும் அளிக்கப்பட்டது.

**4. குற்றச்சாட்டு:–**

அரசுத் தரப்பில் முன் வைக்கப்பட்டுள்ள முகாந்திரங்கள் எதிரிகள் குற்றம் புரிந்திருப்பார்கள் என கருதவும், கருத்தில் கொண்டு செயலாற்றவும் வழிவகுப்பனவாக



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.06.30 17:40:02 + 0530

தெரிந்தமையால், 1வது எதிரிக்கு எதிராக சட்டப்பிரிவுகள் 294(b), 323 இதசவின் கீழும், 2 எதிரிக்கு எதிராக சட்டப்பிரிவு 323 இதசவின் கீழும், 3, 4 எதிரிகளுக்கு எதிராக சட்டப்பிரிவுகள் 323 உ/இ 109 இதசவின் கீழும் குற்றத்தின் சாராம்சங்கள் குறித்து எதிரிகளுக்கு படித்துக்காட்டி, விளக்கிக் கூறி வினவியபோது எதிரிகள் குற்றத்தை மறுத்து தாங்கள் குற்றவாளிகள் இல்லை என்று கூறினர். எனவே வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

5. இவ்வழக்கில் அரசுத்தரப்பில் 1 முதல் 9 வரையிலான சாட்சிகள் பட்டியலிடப்பட்டு, அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்று பொருட்கள் ஏதும் இல்லை.

**அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்:–**

6. வழக்கு சம்பவத்தில் காயமுற்று புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த அ.சா.1 மாரிமுத்து என்பவர் வழக்கு சம்பவம் குறித்து கடந்த 21.09.2023ம் தேதியன்று ஆதனக்கோட்டை காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் அ.சா.5 அருணகிரி என்பவரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்துள்ளார். மேற்படி புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி புகார் வாக்குமூலத்தைப் பெற்ற காவல் உதவி ஆய்வாளர் நிலைய குற்ற எண்.121/2023ல், சட்டப்பிரிவுகள் 294(b), 323 இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்து அ.சா.ஆ.3 கணினி முதல் தகவல் அறிக்கை தயார் செய்துள்ளார்.

7. காவல் உதவி ஆய்வாளர் இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு, 21.09.2023ம் தேதி காலை 11.30 மணியளவில், சம்பவயிடம் சென்று பட்டியல் சாட்சி–5 லெட்சகுமார் மற்றும் பட்டியல் சாட்சி–4 இந்துஜா ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.2 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.4 மாதிரி



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.06.30 17:40:02 + 0530

வரைபடம் தயார் செய்துள்ளார். வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகளாக அ.சா.2 மாமுண்டி, அ.சா.3 பிரியா ஆகியோர் விசாரிக்கப்பட்டுள்ளனர். சாட்சிகளை விசாரணை செய்ததில் வழக்கின் சம்பவம் உண்மை என தெரிய வந்ததால், எதிரிகளை தேடி வந்த நிலையில், எதிரிகள் கடந்த 06.04.2024ம் தேதி இந்நீதிமன்றத்தில் சரணடைந்து பிணையில் சென்றுள்ளதால் எதிரிகளை கைது செய்யவில்லை. பின்னர் வழக்கின் கோப்பினை மேல்விசாரணைக்காக அ.சா.6 மரியதாஸ் என்பவரின் பார்வைக்கு வைத்துள்ளார்.

8. பட்டியல் சாட்சி-7 மருத்துவர் விவேக்ராஜ் என்பவர் சம்பவத்தில் காயமுற்ற அ.சா.1க்கு சிகிச்சை அளித்து அ.சா.ஆ.5 விபத்து பதிவேடு மற்றும் அ.சா.ஆ.6 காயச்சான்று வழங்கியுள்ளார். மேற்படி அ.சா.ஆ.5 மற்றும் அ.சா.ஆ.6 ஆகிய ஆவணங்களுக்கு எதிரிகள் தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்படவில்லை என்பதால், BNSS பிரிவு 330(3)இன் கீழ் மேற்படி ஆவணங்கள் புலன் விசாரணை அதிகாரியின் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் அ.சா.6 காவல் உதவி ஆய்வாளர் வழக்கின் விசாரணை முடித்து வழக்கு கோப்பினை பார்வையிட்டு எதிரிகளுக்கு எதிராக சட்டப்பிரிவுகள் 294(பி), 323 இதசவின் கீழ் குற்ற இறுதியறிக்கை தயார் செய்து தாக்கல் செய்துள்ளார்.

9. இத்துடன் அரசுத்தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

10. அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமாக தோன்றும் அம்சங்கள் குறித்து BNSS பிரிவு 351(1)(ஆ)-ன் படி வினவியபோது எதிரிகள் அதனை மறுத்து பொய்சாட்சியம் என்றனர். எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.06.30 17:40:02 +0530

11. விவாதம்:–

கற்றறிந்த அரசுத்தரப்பு வழக்கறிஞர் இவ்வழக்கில், அரசுத்தரப்பு சாட்சிகள் மூலம் குற்றச்சாட்டு மெய்ப்பிக்கப்பட்டுள்ளதால் எதிரிகளுக்கு தகுந்த தண்டனை அளிக்க வேண்டுமென்று வாதிட்டார்.

எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், இதனை மறுத்து இவ்வழக்கில் அரசுத்தரப்பில் எதிரிகள் மீதான குற்றம் சந்தேகத்திற்கிடமின்றி மெய்ப்பிக்கப்படாததால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரிகளை விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

12. தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை:–

இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டியது என்னவெனில் எதிரிகள் மீது அரசுத்தரப்பில் சுமத்தப்பட்ட குற்றமானது விசாரிக்கப்பட்ட சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின் மூலம் எந்த விதமான சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே ஆகும்.

## தீர்வு

13. இருதரப்பும் கேட்கப்பட்டது. அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களும், சான்றாவணங்கள் மற்றும் வழக்காவணங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது.

14. அரசு தரப்பில், கடந்த 20.09.23ம் தேதி மதியம் சுமார் 01.00 மணியளவில், வயலுக்கு செல்ல அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் 1வது எதிரி வீட்டின் வழியே சென்றபோது, சொத்துப் பிரச்சனையை மனதில் வைத்துக்கொண்டு எதிரிகள் அனைவரும் சேர்ந்து அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோரை பார்த்து தேவுடியா பயலுகலா



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.06.30 17:40:02 + 0530

என்று அசிங்கமாக பேசியதாகவும், 3, 4 எதிரிகள், 2வது எதிரியை நீ போய் அடி நாங்கள் பார்த்து கொள்கிறோம் என்று சொன்னதாகவும், 2வது எதிரி அருகில் கிடந்த RS– பதி கம்பை எடுத்து அ.சா.1இன் தலையில் ஓங்கி அடித்ததாகவும், 1வது எதிரி ஓடிவந்து அ.சா.1 இன் இடுப்பில் ஓங்கி கம்பால் அடித்து தலையில் இரத்த காயமும், இடுப்பில் உள்காயத்தையும் உண்டாக்கி சாதாரண காயம் ஏற்படுத்தியதாகவும் எதிரிகள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

15. வழக்கு சம்பவத்தில் காயமுற்று புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த அ.சா.1 மாரிமுத்து என்பவர் வழக்கு சம்பவம் குறித்து கடந்த 21.09.2023ம் தேதியன்று ஆதனக்கோட்டை காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் அ.சா.5 அருணகிரி என்பவரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்துள்ளார். மேற்படி புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தை பரிசீலனை செய்ததில், கடந்த 20.09.2023ம் தேதி மதியம் சுமார் 01.00 மணியளவில், அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் வயலுக்கு செல்வதற்காக போதுமணி என்பவரின் வீட்டின் வழியாக சென்றபோது, சொத்துப் பிரச்சனையை மனதில் வைத்துக் கொண்டு போதுமணி தேவுடியா பயலே என்று அசிங்கமாக பேசியதாகவும், கணேசன் மற்றும் கோவிந்தராஜ் இருவரும் விருதாம்பாளை நீ போய் அடி நாங்கள் பார்த்து கொள்கிறோம் என்று சொன்னதாகவும், விருதாம்பாள் அருகில் கிடந்த RS பதி கம்பை எடுத்து அ.சா.1இன் தலையில் ஓங்கி அடித்ததாகவும், போதுமணி கம்பால் இடுப்பில் ஓங்கி அடித்ததாகவும், அதனால் அ.சா.1க்கு தலையில் இரத்த காயமும், இடுப்பில் உள்காயமும் ஏற்பட்டதாகவும், பின்னர் அ.சா.1இன் பெரியப்பா மகன் மதுரைவீரன் என்பவர் இருசக்கர வாகனத்தில் வந்து புதுக்கோட்டை மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்ததாக குறிப்பிட்டு புகார் வாக்குமூலம் அளிக்கப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது.

16. வழக்கு சம்பவம் குறித்து புகார் வாக்குமூலம் கொடுத்துள்ள மாரிமுத்து என்பவர் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், கடந்த 20.09.2023ம்



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.06.30 17:40:02 + 0530

தேதி, தானும், தனது தந்தை மாமுண்டி என்பவரும் தங்கள் வயலுக்கு சென்று கொண்டிருந்தபோது, மதியம் சுமார் 01.00 இருக்கும் என்றும், தாங்கள் இருவரும் 1வது எதிரி போதுமணி வீட்டிற்கு எதிரே சென்று கொண்டிருந்தபோது, தங்களைப் பார்த்து தேவுடியா பயலே, நில்லுடா என்று அசிங்கமாக திட்டினார் என்றும், பேசிக்கொண்டிருந்தபோது எதிரிகள் கணேசன், கோவிந்தராஜ் ஆகியோர் எதிரி விருதாம்பாளை குச்சியால் அடிக்குமாறும் எது நடந்தாலும் பார்த்துக்கொள்ளலாம் என்றும் சொன்னார்கள் என்றும், எதிரி விருதாம்பாள் ஆர்.எஸ்.பதி கட்டையால் தனது தலையில் அடித்ததில் தனக்கு இரத்த காயம் ஏற்பட்டது என்றும், எதிரி போதுமணி ஆர்.எஸ்.பதி கட்டையால் தனது இடுப்பில் அடித்தார் என்றும், தனது பெரியப்பா மகன் மதுரைவீரன் என்பவர் காயம்பட்ட தன்னை இருசக்கர வாகனத்தின் மூலமாக புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று சிகிச்சைக்கு சேர்த்தார் என்றும், மறுநாள் ஆதனக்கோட்டை காவல் நிலைய போலிசார் மருத்துவமனை வந்து விசாரித்து, புகார் வாக்குமூலம் பெற்றார்கள் என்றும், புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் தன்னுடையது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.**

17. வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக அ.சா.2 மாமுண்டி என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், கடந்த 20.09.2023ம் தேதி, தானும், தனது மகன் அ.சா.1 மாரிமுத்து என்பவரும், தங்கள் வீட்டிலிருந்து மேற்கு புறமாக சென்று கிழக்கில் உள்ள தங்கள் வயலுக்கு சென்று கொண்டிருந்தபோது, மதியம் சுமார் 01.00 இருக்கும் என்றும், தனது மகன் இருசக்கர வாகனத்தினை ஓட்டிச் சென்றார் என்றும், தான் பின்னால் அமர்ந்திருந்தேன் என்றும், தாங்கள் இருவரும் 1வது எதிரி போதுமணி வீட்டிற்கு எதிரே சென்று கொண்டிருந்த போது, 1வது எதிரி தாங்கள் சென்ற இருசக்கர வாகனத்தை தேக்கி தள்ளிவிட்டார் என்றும், தாங்கள் இருவரும் கீழே விழுந்துவிட்டோம் என்றும், அப்போது எதிரிகள் கணேசன், கோவிந்தராஜ் ஆகியோர் எதிரி விருதாம்பாளை குச்சியால் அடிக்குமாறு சொன்னார்கள் என்றும், எதிரி விருதாம்பாள் ஆர்.எஸ்.பதி கட்டையால் அ.சா.1–ன் நடு மண்டையில் அடித்ததில்



SIVAPALANI
Digitally signed by SIVAPALANI Date: 2026.06.30 17:40:02 + 0530

இரத்த காயம் ஏற்பட்டு கீழே விழுந்து விட்டார் என்றும், எதிரி போதுமணி ஆர்.எஸ்.பதி கட்டையால் அ.சா.1-இன் இடுப்பில் அடித்தார் என்றும், தான் அதன் பிறகு எழுந்து விலக்கிவிட்டேன் என்றும், தனது அண்ணன் மகன் மதுரைவீரன் என்பவர் காயம்பட்ட தனது மகனை இருசக்கர வாகனத்தின் மூலமாக புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று சிகிச்சைக்கு சேர்த்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

18. மற்றொரு கண்ணுற்ற சாட்சியாக அ.சா.3 பிரியா என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், கடந்த 20.09.2023 ஆம் தேதி, மதியம் சுமார் 01.00 மணியளில், அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் இருசக்கர வாகனத்தில் 1வது எதிரி போதுமணி வீட்டு வழியாக சென்றார்கள் என்றும், தான் 1வது எதிரி வீட்டிற்கு எதிரே உள்ள தனது வீட்டில் குழந்தையை வைத்து கொண்டு நின்று கொண்டிருந்தபோது, 1வது எதிரி அ.சா.1 மற்றும் அ.சா.2 வந்த வண்டியை மறைத்து, தேவுடியா பயலே என்று சொன்னார் என்றும், பேசிக்கொண்டிருந்த போது, எதிரிகள் கணேசன், கோவிந்தராஜ் ஆகியோர் எதிரி விருதாம்பாளை பார்த்து அடிக்குமாறு சொன்னார்கள் என்றும், எதிரி விருதாம்பாள் ஆர்.எஸ்.பதி கட்டையால் அ.சா.1-ன் தலையில் அடித்ததில் அ.சா.1 மற்றும் அ.சா.2 வண்டியில் இருந்து கீழே விழுந்துவிட்டார்கள் என்றும், அ.சா.1-க்கு தலையில் இரத்தம் வந்தது என்றும், எதிரி போதுமணி பக்கத்தில் இருந்த கட்டையை எடுத்து அ.சா.1-இன் இடுப்பில் அடித்தார் என்றும், தான் உடனடியாக போன் மூலமாக தகவல் சொன்னதன் பேரில் தனது கணவர் அங்கு வந்து காயம்பட்ட அ.சா.1-ஐ இருசக்கர வாகனத்தில், மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

19. பார்வை மகஜர் சாட்சியாக அ.சா.4 இந்துஜா என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், கடந்த 20.09.2023ம் தேதி, தனது கணவர் மாரிமுத்துக்கும் அ.சா.1க்கும் இடையே சண்டை நடைபெற்றது என்றும், மறுநாள் 21.09.2023ம் தேதி காலை சுமார் 11.30 மணியளவில், தானும், லெட்சக்குமார் என்பவரும் சம்பவ இடம்



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.06.30 17:40:02 + 0530

அருகில் பேசிக் கொண்டிருந்தபோது, போலிசார் சம்பவம் குறித்து விசாரணை செய்து, சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்தார்கள் என்றும், அதற்காக தங்களிடம் சாட்சி கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள் என்றும், பார்வை மகஜரில் தானும் லெட்சக்குமார் என்பவரும் கையொப்பம் செய்தோம் என்றும், பார்வை மகஜரிலுள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் தன்னுடையது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். **பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.**

20. புலன் விசாரணை அதிகாரி அ.சா.5 அருணகிரி தனது சாட்சியத்தில் , கடந்த 21.09.2023ம் தேதி ஆதனக்கோட்டை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்த போது, புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த மாரிமுத்து என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று நிலையம் ஆஜராகி நிலைய குற்ற எண்.121/2023 இல் சட்டப்பிரிவுகள் 294(b), 323 இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்ததாகவும், வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, 21.09.2023ம் தேதி, காலை 11.30 மணியளவில் சம்பவ இடம் சென்று, சாட்சிகள் லெட்சகுமார் மற்றும் இந்துஜா ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்து, சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பட்டியல் சாட்சிகள் மாரிமுத்து, மாமுண்டி, பிரியா, மதுரைவீரன் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், சாட்சிகளை விசாரித்ததில் வழக்கின் சம்பவம் உண்மை என்று தெரிய வந்ததால், வழக்கின் எதிரிகளை தேடி வந்த நிலையில், எதிரிகள் கடந்த 06.04.2024 ஆம் தேதி நீதிமன்றத்தில் சரணடைந்து, உரிய பிணையில் வெளிவந்தது தெரியவந்ததால் அவர்களை வழக்கில் கைது செய்யவில்லை என்றும், பின்னர் தனக்கு பணி மாறுதல் வந்துவிட்டதால் உதவி ஆய்வாளராக பொறுப்பேற்ற மரியதாஸ் என்பவரிடம் வழக்கு கோப்பினை ஒப்படைத்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.06.30 17:40:02 +0530

21. புலன் விசாரணை அதிகாரி அ.சா.6 மரியதாஸ் தனது சாட்சியத்தில், கடந்த 18.10.2023ம் தேதி ஆதனக்கோட்டை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது, உதவி ஆய்வாளர் அருணகிரி என்பவர் நிலைய குற்ற எண்.121/2023 இல் சட்டப்பிரிவுகள் 294(b), 323, இதசவின் கீழான வழக்கினை முதல் விசாரணை செய்து அவருக்கு பணிமாறுதல் வந்துவிட்டதால் வழக்கு கோப்பினை என்னிடம் ஒப்படைத்தார் என்றும், வழக்கினை விசாரணைக்கு எடுத்துகொண்டு 18.10.2023 ஆம் தேதி புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சென்று அ.சா.1–க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் விவேக்ராஜ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்று அ.சா.1–க்கான விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று பெற்று வந்ததாகவும், வழக்கின் விசாரணையை முடித்து வழக்கின் கோப்பினை பார்வையிட்டு எதிரிகளுக்கு எதிராக 294(b), 323 இதச கீழ் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

22. அரசுத் தரப்பில், எதிரிகள் அ.சா.1ஐ அசிங்கமாக திட்டியதாக பிரிவு 294(பி) இதசவின் கீழ் எதிரிகள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. ஆனால், அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தினை பரிசீலனை செய்ததில், 1வது எதிரி போதுமணி என்பவர் மட்டுமே அசிங்கமாக பேசியதாக குறிப்பிட்டு புகார் வாக்குமூலம் அளிக்கப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. அ.சா.1 தனது சாட்சியத்தில், 1வது எதிரி போதுமணி என்பவரின் வீட்டிற்கு எதிரே சென்று கொண்டிருந்தபோது, 1வது எதிரி தங்களை பார்த்து தேவுடியா பயலே, நில்லுடா என்று அசிங்கமாக திட்டியதாக சாட்சியம் அளித்துள்ளார். வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.3 பிரியா தனது சாட்சியத்தில், 1வது எதிரி அ.சா.1 மற்றும் அ.சா.2 வந்த வண்டியை மறைத்து தேவுடியா பயலே என்று சொன்னார் என்று சாட்சியம் அளித்துள்ளார். மற்றொரு கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.2 மாமுண்டி தனது சாட்சியத்தில், எதிரிகள் அவ்வாறு அசிங்கமான வார்த்தைகளால் திட்டியதாக சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. மேலும், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் K.Jayaramanuja vs Janakaraj and others (1996 (1) CTC 470) என்ற வழக்கில்,



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.06.30 17:40:02 + 0530

**"To prove the offence under section 294 IPC, mere utterance of obscene words are not sufficient, but there must be a further proof to establish that it was to the annoyance of others"**

என்று கூறியுள்ளது. எனவே இதச பிரிவு 294(பி)—ன் படியான குற்றம் நிரூபிக்கப்படுவதற்கு ஆபாச வார்த்தைகள் பேசியது மட்டும் போதாது, அந்த ஆபாச வார்த்தைகள் மற்றவர்களுக்கு எரிச்சலை (Annoyance) ஏற்படுத்தியதாக சாட்சியம் வேண்டும், ஆனால், இவ்வழக்கில் அவ்வாறு சாட்சியங்கள் எதுவும் அளிக்கப்படவில்லை. எனவே எதிரிகள் மீதான இ.த.ச பிரிவு 294(b)—ன் படியான குற்றச்சாட்டிற்கு உறுதியூட்டும் சாட்சியங்கள் மூலம் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

23. அரசுத் தரப்பில், அ.சா.1ஐ, 2வது எதிரி RS— பதி கம்பால் தலையில் ஓங்கி அடித்து சாதாரண காயத்தை ஏற்படுத்தியதாகவும், அ.சா.1ஐ, 1வது எதிரி RS பதி கம்பால் இடுப்பில் ஓங்கி அடித்து இடுப்பில் உள்காயத்தையும் ஏற்படுத்தியதாகவும் 1, 2 எதிரிகள் மீது பிரிவு 323 இதசவின் கீழும் , 3, 4 எதிரிகள் 2வது எதிரியை அ.சா.1ஐ அடிக்கச் சொல்லி தூண்டிவிட்டதாக 3, 4 எதிரிகள் மீது பிரிவு 323 இதச உ/இ 109 இன்கீழும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தை பரிசீலனை செய்ததில், கடந்த 20.09.2023ம் தேதி மதியம் சுமார் 01.00 மணியளவில், அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் வயலுக்கு செல்வதற்காக போதுமணி என்பவரின் வீட்டின் வழியாக சென்றபோது, சொத்துப் பிரச்சனையை மனதில் வைத்துக் கொண்டு 3 வது எதிரி கணேசன் மற்றும் 4வது எதிரி கோவிந்தராஜ் இருவரும் 2வது எதிரி விருதாம்பாளை நீ போய் அடி நாங்கள் பார்த்து கொள்கிறோம் என்று சொன்னதாகவும், 2வது எதிரி விருதாம்பாள் அருகில் கிடந்த RS பதி கம்பை எடுத்து அ.சா.1இன் தலையில் ஓங்கி அடித்ததாகவும், 1வது எதிரி போதுமணி இடுப்பில் ஓங்கி கம்பால் அடித்ததாகவும் குறிப்பிட்டு புகார் வாக்குமூலம் அளிக்கப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது.



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.06.30 17:40:02 + 0530

24. அ.சா.1 தனது சாட்சியத்தில், கடந்த 20.09.2023ம் தேதி, தானும், தனது தந்தை மாமுண்டி என்பவரும் தங்கள் வயலுக்கு செல்வதற்காக 1வது எதிரி போதுமணி வீட்டிற்கு எதிரே சென்று கொண்டிருந்தபோது, எதிரிகள் கணேசன், கோவிந்தராஜ் ஆகியோர் எதிரி விருதாம்பாளை குச்சியால் அடிக்குமாறும் எது நடந்தாலும் பார்த்துக்கொள்ளலாம் என்றும் சொன்னதாகவும், எதிரி விருதாம்பாள் ஆர்.எஸ்.பதி கட்டையால் தனது தலையில் அடித்ததில் தனக்கு இரத்த காயம் ஏற்பட்டதாகவும், எதிரி போதுமணி ஆர்.எஸ்.பதி கட்டையால் தனது இடுப்பில் அடித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 தனது சாட்சியத்தில், எதிரிகள் கணேசன், கோவிந்தராஜ் ஆகியோர் எதிரி விருதாம்பாளை குச்சியால் அடிக்குமாறு சொன்னதாகவும், எதிரி விருதாம்பாள் ஆர்.எஸ்.பதி கட்டையால் அ.சா.1இன் நடு மண்டையில் அடித்ததில் இரத்த காயம் ஏற்பட்டு கீழே விழுந்து விட்டதாகவும், எதிரி போதுமணி ஆர்.எஸ்.பதி கட்டையால் அ.சா.1 இன் இடுப்பில் அடித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மற்றொரு கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.3 தனது சாட்சியத்தில், எதிரிகள் கணேசன், கோவிந்தராஜ் ஆகியோர் எதிரி விருதாம்பாளை பார்த்து அடிக்குமாறு சொன்னதாகவும், எதிரி விருதாம்பாள் ஆர்.எஸ்.பதி கட்டையால் அ.சா.1 இன் தலையில் அடித்ததில் அ.சா.1 மற்றும் அ.சா.2 வண்டியில் இருந்து கீழே விழுந்துவிட்டதாகவும், அ.சா.1–க்கு தலையில் இரத்தம் வந்ததாகவும், எதிரி போதுமணி பக்கத்தில் இருந்த கட்டையை எடுத்து அ.சா.1 இன் இடுப்பில் அடித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். எனவே, அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலானவர்கள் வழக்கு சம்பவத்தின் போது 3, 4 எதிரிகளின் தூண்டுதலின் பேரில் 1, 2 எதிரிகள் தாக்கியதால் அ.சா.1க்கு ஏற்பட்ட காயம் குறித்து தெளிவாக சாட்சியம் அளித்துள்ளனர்.

25. வழக்கு சம்பவத்தில் காயமுற்ற அ.சா.1 கடந்த 20.09.2023ம் தேதி புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். அப்போது அங்கு பதிவு செய்யப்பட்ட விபத்து பதிவேடு அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி விபத்து பதிவேட்டில் அ.சா.1க்கு ஏற்பட்ட காயம் குறித்து



Digitally signed by SIVAPALANI
SIVAPALANI Date: 2026.06.30 17:40:02 + 0530

பதிவு செய்யப்பட்டுள்ளது. அ.சா.ஆ.5 விபத்து பதிவேட்டில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டபோது அ.சா.1இன் தலையில் 3x3 செ.மீ அளவில் கிழிந்த காயம் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், அ.சா.1 உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்ட விவரமும் பதிவு செய்யப்பட்டுள்ளது. சிகிச்சை முடித்து அ.சா.1க்கு வழங்கப்பட்ட காயச்சான்று அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி காயச்சான்றில் 23.09.2023ம் தேதி அ.சா.1 சிகிச்சை முடித்து மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், மேற்படி காயச்சான்றில் அ.சா.1க்கு ஏற்பட்ட மேற்படி காயம் சாதாரண காயம் என கருத்துரை வழங்கப்பட்டுள்ளது. மேற்படி அ.சா.ஆ.5 விபத்து பதிவேடு மற்றும் அ.சா.ஆ.6 காயச்சான்று ஆகிய ஆவணங்கள் குறித்து எதிரி தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்படவில்லை என்பதால் மேற்படி ஆவணங்கள் புலன் விசாரணை அதிகாரி மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

26. எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் இவ்வழக்கில் கூறப்பட்டுள்ள அதே சம்பவ இடத்தில் , அதே சம்பவ நேரத்தில் எதிரிகள் அவர்கள் வீட்டிலிருந்தபோது, அ.சா.1 மற்றும் அ.சா.2 எதிரிகளின் வீட்டிற்கு வந்து அவர்களை அசிங்கமாக பேசி, கட்டையால் தாக்கி காயம் ஏற்படுத்தியதாக அ.சா.1 மற்றும் அ.சா.2இன் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் CC.No.58/2024 இல் வழக்கு நிலுவையில் இருந்து வருவதாகவும், அ.சா.1 மற்றும் அ.சா.2 எதிரிகளை முதலில் தாக்கி விட்டு அவ்வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக எதிரிகள் மீது பொய்யாக புகார் அளித்துள்ளதாகவும், அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் தான் முதலில் தாக்கிய நபர்கள் என்பதால், அரசுத் தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் பொய்யானவை என்றும், எதிரிகளை வழக்கிலிருந்து விடுதலை செய்ய வேண்டுமென்றும் தெரிவித்தார். அ.சா.1 மற்றும் அ.சா.2இன் மீது இந்நீதிமன்றத்தில் CC.No.58/2024 என்ற வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்பது அ.சா.1 மற்றும் அ.சா.2 தங்களது குறுக்கு விசாரணையில் ஒப்புக் கொண்டுள்ளார்கள். ஆனால், அ.சா.1 தனது குறுக்கு விசாரணையிலும் எதிரிகள் தான் தன்னை தாக்கினார்கள் என்றும்,



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.06.30 17:40:02 + 0530

அ.சா.2 தனது குறுக்கு விசாரணையிலும் எதிரிகள் தான் தனது மகனான அ.சா.1ஐ தாக்கினார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்கள். புலன் விசாரணை அதிகாரியான அ.சா.6 மரியதாஸ் என்பவர் அ.சா.1 மற்றும் அசா.2இன் மீது CC.No.58/2024 என்ற வழக்கு நிலுவையில் உள்ளது என்பதை ஒப்புக் கொண்டுள்ளார். ஆனால், எதிரிகள் தரப்பில் இந்த வழக்கும், CC.No.58/2024 என்ற வழக்கும் எதிர் எதிர் வழக்குகள் என்பதையும், அ.சா.1 மற்றும் அ.சா.2 தான் முதலில் தாக்கிய நபர்கள் என்பதையும் நிரூபணம் செய்வதற்கு CC.No.58/2024 என்ற வழக்கில் கண்ட ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, அ.சா.1 மற்றும் அசா.2இன் மீது CC.No.58/2024 என்ற வழக்கு நிலுவையில் உள்ளது என்பதை மட்டும் வைத்து, அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் தான் முதலில் தாக்கிய நபர்கள் என்று முடிவுக்கு வர இயலாது. எனவே, எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் மேற்படி வாதம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை.

27. எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், முதல் தகவல் அறிக்கையில் மருத்துவமனையில் இருந்து 21.09.2023ம் தேதி காலை 10.30 மணியளவில் தகவல் கிடைத்ததாக கூறப்பட்டுள்ள நிலையில், புகார் வாக்குமூலத்திலும், முதல் தகவல் அறிக்கையிலும் அன்றைய தினம் காலை 10.30 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது அரசுத் தரப்பு வழக்கில் சந்தேகத்தை ஏற்படுத்துவதாக தெரிவித்தார். அ.சா.ஆ.5 விபத்து பதிவேட்டின் படி அ.சா.1 20.09.2023ம் தேதி மதியம் 02.20 மணியளவில் புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. 21.09.2023ம் தேதி காலை 10.30 மணியளவில் புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துமவனையிலிருந்து தகவல் கிடைத்ததாக முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. புகார் வாக்குமூலம் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ள உதவி ஆய்வாளர் அ.சா.5 அருணகிரி என்பவர் தனது குறுக்கு விசாரணையில், மருத்துவமனையிலிருந்து காலை 10.30 மணிக்கு தகவல் கிடைத்தவுடன் உடனடியாக மருத்துவமனை சென்று புகார் வாக்குமூலம் பெற்று,



Digitally signed by SIVAPALANI
SIVAPALANI Date: 2026.06.30 17:40:02 + 0530

சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பெற்று மதியம் 01.00 மணியளவில் காவல் நிலையம் திரும்பியதாக சாட்சியம் அளித்துள்ளார். மேலும், முதல் தகவல் அறிக்கையிலும் 21.09.2023ம் தேதி காலை 10.30 மணி காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, புகார் வாக்குமூலத்தில் காலை 10.30 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதாக மேற்குறிப்பு எழுதப்பட்டுள்ளது மட்டுமே அரசுத் தரப்பு வழக்கில் சந்தேகத்தை ஏற்படுத்துவதாக அமையவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

28. அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலம், அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலானவர்களின் சாட்சியங்கள் மற்றும் அ.சா.ஆ.5 விபத்து பதிவேடு மற்றும் அ.சா.ஆ.6 காயச்சான்று ஆகியவற்றின் மூலம் 2வது எதிரி RS பதி கம்பால் அ.சா.1இன் தலையில் அடித்து சாதாரண காயத்தை ஏற்படுத்தியுள்ளார் என்பது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆனால், மருத்துவ சாட்சியத்தின்படி அ.சா.1க்கு இடுப்பில் எந்த காயமும் இல்லை என்பதால், 1வது எதிரியக்கு எதிரான இதச பிரிவு 323 இன் கீழான குற்றச்சாட்டு அரசுத் தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை. அரசுத் தரப்பில் 2வது எதிரி மீதான இதச பிரிவு 323இன் கீழான குற்றச்சாட்டு மற்றும் 3, 4 எதிரிகள் மீதான 323 உ/இ 109 இதசவின் கீழான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

29. முடிவாக,

**(29.1) 2வது எதிரி இதச பிரிவு 323இன் கீழ் குற்றவாளி என முடிவு செய்து, அதற்கு ரூ.1,000/- அபராதம் விதித்தும் அபராதம் கட்ட தவறினால் 1 வாரம் மெய்காவல் சிறை தண்டனை விதித்தும்,**

**(29.2) 3, 4 எதிரிகள் இதச பிரிவு 323 உ/இ 109 இன் கீழ் குற்றவாளி என முடிவு செய்து, அதற்கு தலா ரூ.1,000/- அபராதம் விதித்தும், அபராதம் கட்ட தவறினால் தலா 1**



SIVAPALANI
Digitally signed by SIVAPALANI
Date: 2026.06.30 17:40:02 + 0530

**வாரம் மெய்காவல் சிறை தண்டனை விதித்தும், குவிமுச பிரிவு 255(2)இன் கீழ் உத்தரவிடப்படுகிறது. (மொத்த அபராத தொகை ரூ.3,000/-).**

**(29.3) 1வது எதிரி சட்டப்பிரிவு 294(b), 323 இதசவின் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து , 1வது எதிரியை குவிமுச பிரிவு 255(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.**

30. வழக்கு சொத்துக்கள் ஏதும் இல்லை. எதிரிகள் எழுதிக்கொடுத்துள்ள பிணை பத்திரங்கள் மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை முழுவதும் என்னால் சுருக்கெழுத்து தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 30.06.2026ம் தேதியில் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.06.30 17:40:02 + 0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், கந்தர்வகோட்டை.**

**அரசுத் தரப்பு சாட்சிகள்:-**

| அரசு தரப்பு சாட்சிகளின் வரிசை | சாட்சிகளின் பெயர் | சாட்சிகளின் விபரம் |
|---|---|---|
| அ.சா.1 | திரு. மாரிமுத்து | புகார்தாரர் |
| அ.சா.2 | திரு. மாமுண்டி | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.3 | திருமதி. பிரியா | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.4 | திருமதி.இந்துஜா | பார்வை மகஜர் சாட்சி |
| அ.சா.5 | திரு. அருணகிரி | புலன் விசாரணை அதிகாரி (காவல் உதவி ஆய்வாளர்) |
| அ.சா.6 | திரு.மரியதாஸ் | புலன் விசாரணை அதிகாரியான (காவல் உதவி ஆய்வாளர்) |

<u>அரசுத் தரப்பு சான்றாவணங்கள்:–</u>

| சான்று ஆவணங்களின் வரிசை | தேதி | சான்றாவணங்களின் விபரம் | யாரால் நிரூபிக்கப்பட்டுள்ளது |
|---|---|---|---|
| அ.சா.ஆ.1 | 04.03.2026 | புகார் வாக்குமூலம் | அ.சா.1 |
| அ.சா.ஆ.2 | 17.03.2026 | பார்வை மகஜர் | அ.சா.4 |
| அ.சா.ஆ.3 | 29.04.2026 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.5 |
| அ.சா.ஆ.4 | 29.04.2026 | மாதிரி வரைபடம் | அ.சா.5 |
| அ.சா.ஆ.5 | 26.05.2026 | அ.சா.1க்கு வழங்கப்பட்டுள்ள விபத்து பதிவேடு | அ.சா.6 |
| அ.சா.ஆ.6 | 26.05.2026 | அ.சா.1க்கு வழங்கப்பட்டுள்ள காயச்சான்று | அ.சா.6 |

<u>அரசு தரப்பு சான்று பொருட்கள்:–</u> இல்லை

<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள்</u> :– இல்லை

<u>எதிரிகள் தரப்பு சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள்::–</u> இல்லை

<u>குறிப்பு:–</u>

1. எதிரிகள் கடந்த05.04.2024ம் தேதியன்று இந்நீதிமன்றத்தில் கு.ப.ம.எண். 849/2024ல், நாள்.05.04.2024ம் தேதியன்று சரணடைந்து சென்றுள்ளனர்.

2. சாட்சிகள் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3. இவ்வழக்கின் தீர்ப்பு சம்பந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. எதிரிகளுக்கு தீர்ப்புரையின் நகல் வழங்கப்பட்டுள்ளது.

5. இவ்வழக்கில் வழக்கு சொத்து இல்லை.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.06.30 17:40:02 + 0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**